**திருச்சிராப்பள்ளி**
**தூய வளனார் கல்லூரித்**
**தமிழாய்வுத்துறையில்**
நிறுவப்பட்டுள்ள

**ஆசா அறக்கட்டளை**

நடத்திடும்



# "வியத்தகு வித்தகர் வீரமாமுனிவர்"

**கலைப்போட்டிகள் & சொற்பொழிவு**

***26.02.2025, புதன்***

**அழைப்பும் அறிவிப்பும்**

தொன்மையும் தனித்துவமும் ஒருங்கமையப்பெற்று, *180* ஆண்டுகளாய்க் கல்வி வழி மனிதம் வளர்க்கும் **திருச்சிராப்பள்ளி தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரியின்** புகழுக்குக் கூடுதல் அழகு சேர்க்கும் எம் **தமிழாய்வுத்துறையில்** அமையப் பெற்றுள்ளது **ஆசா அறக்கட்டளை.** திருச்சிராப்பள்ளி மக்கள் இதயங்களில் செயல்பாடுகளால் ஒளிந்திருக்கின்ற மேனாள் சட்டமன்ற உறுப்பினர் **திருமிகு ச.ஆரோக்கியசாமி** அவர்களின் நினைவாக முதுதமிழ் எழிலரசி **எழுத்தாளர் கேத்தரின் ஆரோக்கியசாமி** அவர்களால் *2019* ஆம் ஆண்டு நிறுவப்பட்டதே இந்த அறக்கட்டளை.

**இத்தாலி நாட்டு வித்தகர் வீரமாமுனிவரின்** வியத்தகு தமிழ்ப்பணியைக் கல்லூரி மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்கிற தீர்க்கமான நோக்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் வீரமாமுனிவர் குறித்த சொற்பொழிவுகளையும், கலைப் போட்டிகளையும், நடத்தி செயலூக்கம் பெற்று வருகிறது இந்த அறக்கட்டளை. அந்த வரிசையில் எதிர்வரும் பிப்ரவரி *26* (புதன்) அன்று **"வியத்தகு வித்தகர் வீரமாமுனிவர்"** என்கிற பொருண்மையில் கலைப் போட்டிகளையும், சொற்பொழிவையும் நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

| போட்டிகள் | பரிசு |
|---|---|
| **கட்டுரை, கவிதை, பேச்சு & சுவரொட்டி தயாரித்தல்** | **முதல் பரிசு : ரூபாய் *2000/-***<br>**இரண்டாம் பரிசு : ரூபாய் *1500/-***<br>**மூன்றாம் பரிசு : ரூபாய் *1000/-*** |

இந்த நிகழ்வில் தங்கள் கல்லூரி மாணவர்களைப் பங்கேற்க வைத்து, வீரமாமுனிவரை பற்றிய புரிதலையும், தெளிவையும் அதிகப்படுத்திட அன்புடன் அழைக்கிறோம்.

அழைப்பின் மகிழ்வில்,
**முதல்வர் & தமிழாய்வுத்துறையினர்**
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**கட்டுரை**

## எழுதுகோலால் உழுதுகாட்டிய வீரமாமுனிவர்

- *மேற்கண்ட தலைப்பில் ஐந்து பக்க அளவில் கட்டுரை அமைந்திருத்தல் வேண்டும்.*
- *ஒரு கல்லூரியில் இருந்து எத்தனை பேர் வேண்டுமானாலும் கட்டுரை எழுதலாம். ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே எழுத வேண்டும். ஒரே கல்லூரியிலிருந்து எழுதப்பட்ட கட்டுரைகளை ஒரே அஞ்சலில் அனுப்பலாம்.*
- *கட்டுரைகள் வந்து சேர வேண்டிய* ***கடைசி நாள் 10.02. 2025.*** *அன்றைய நாள் மாலை 5 மணிக்குள் தமிழாய்வுத்துறைக்கு கட்டுரைகள் வந்து சேர்ந்திருக்க வேண்டும். அதன் பிறகு வரும் கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்படாது.*
- *போட்டி முடிவுகள்* ***20.02.2025*** *அன்று பிற்பகல் 3 மணிக்கு எமது கல்லூரி இணையதளத்தில்* ***(www.sjctni.edu)*** *வெளியிடப்படும். வெற்றி பெற்றவர்கள்* ***26.02.2025*** *அன்று கல்லூரியில் நடைபெறும் விழாவில் பங்கேற்றுப் பரிசுத்தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.*

---

**சுவரொட்டி தயாரித்தல்**

## வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டு

- *மேற்கண்ட பொருண்மையில் சுவரொட்டி தயாரித்திருத்தல் வேண்டும்.*
- *ஒரு கல்லூரியிலிருந்து இருவர் இணைந்து ஒரு சுவரொட்டி தயாரிக்க வேண்டும்*
- *சுவரொட்டி அளவு* ***ஒரு வரைவட்டை (Chart) அளவு*** *மட்டுமே. வண்ணம் தீட்டுதல் வரவேற்கத்தக்கது.*
- *சுவரொட்டிகள் வந்து சேர வேண்டிய* ***கடைசி நாள் 10.02. 2025.*** *அன்றைய நாள் மாலை 5 மணிக்குள் தமிழாய்வுத்துறைக்கு சுவரொட்டிகள் வந்து சேர்ந்திருக்க வேண்டும். அதன் பிறகு வரும் சுவரொட்டிகள் ஏற்றுக் கொள்ளப்படாது.*
- *போட்டி முடிவுகள்* ***20.02.2025*** *அன்று பிற்பகல் 3 மணிக்கு எமது கல்லூரி இணையதளத்தில்* ***(www.sjctni.edu)*** *வெளியிடப்படும். வெற்றி பெற்றவர்கள்* ***26.02.2025*** *அன்று கல்லூரியில் நடைபெறும் விழாவில் பங்கேற்றுப் பரிசுத்தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.*

## தீந்தமிழ்ப்புலவர் வீரமாமுனிவர்

**பேச்சு**

- மேற்கண்ட தலைப்பில் ஐந்து நிமிட உரை தயாரித்திருத்தல் வேண்டும்.
- ஒரு கல்லூரியில் இருந்து இருவர் மட்டுமே பங்கேற்க வேண்டும்.
- பேச்சுப் போட்டியின் பங்கேற்பாளர்கள் பட்டியல் வந்து சேர வேண்டிய **கடைசி நாள் 10.02.2025.**
- போட்டி **26.02.2025** அன்று காலை 9.30 மணிக்குத் தொடங்கும்.
- கருத்து - மொழிநடை ஆகியன அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.
- போட்டியில் பங்கேற்ற அனைவரும் நிறைவு விழாவில் பங்கேற்க வேண்டும். வெற்றி பெற்றவர்களுக்கு நிறைவு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

**கவிதை**

- ஒரு கல்லூரியில் இருந்து இருவர் மட்டுமே பங்கேற்க வேண்டும்.
- கவிதைப் போட்டியில் பங்கேற்போரின் பட்டியல் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 10.02. 2025
- 26.02.2025 காலை 9.30 மணிக்குப் போட்டி தொடங்கும். 10.30 மணிக்குப் போட்டி நிறைவுபெறும்.
- போட்டி தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பு தலைப்பு வழங்கப்படும்.
- கவித்துவம் - கருத்து ஆகியன அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.
- போட்டியில் பங்கேற்ற அனைவரும் நிறைவு விழாவில் பங்கேற்க வேண்டும். வெற்றி பெற்றவர்களுக்கு நிறைவு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

தொடர்புக்கு...

**முனைவர் ஜா.சலேத்**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 002 / அலைபேசி: **63814 93915**